வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 4636 /ஆ3/2020, நாள். .12.2020

பொருள் பள்ளிக்கல்வி – அரசு உயர் / மேல்நிலைப்பள்ளிகளில் இன்டர்நெட் மற்றும் கணினி வசதியுடன் கூடிய உயர் தொழில் நுட்ப ஆயவகங்கள் நிறுவப்பட்டது – ஆய்வக உபகரணங்கள் களவு போனது மற்றும் சேதம் அடைந்தது – பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திட அறிவுரைகள் வழங்குதல் – சார்பு

பார்வை தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை –06, ந.க.எண்.76896/பிடி1/இ3/2017 நாள். 12.2020.

•••••

பார்வை–1ல் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க அரசு உயர் / மேல்நிலைப்பள்ளிகளில் இன்டர்நெட் மற்றும் கணினி வசதியுடன் கூடிய உயர் தொழில் நுட்ப ஆயவகங்கள் நிறுவப்பட்டு L & T நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் சில பள்ளிகளில் நிறுவப்பட்டுள்ள உயர் தொழில் நுட்ப ஆய்வகங்களின் உபகரணங்கள் களவு போனதாகவும், சில உபகரணங்கள் உயர் மின் அழுத்தத்தால் சேதமடைந்துள்ளதாகவும் பார்வை–2ல் காணும் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் பொருள் சார்ந்து பார்வை–1ல் காணும் செயல்முறைகள் வாயிலாக ஏற்கனவே அறிவுரைகள் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் உபகரணங்கள் களவு போனது மற்றும் உயர் மின் அழுத்தத்தால் சேதமடைந்தது போன்ற நிகழ்வுகள் நடந்தது வருத்தத்திற்குரியது. மேலும் இதுபோன்று சம்பவங்கள் நடைபெறாமல் தடுத்திட தலைமையாசிரியர் ஒரு குழு அமைத்து(கணினி ஆசிரியர் உட்பட) , அக்குழுவானது உயர் தொழிநுட்ப ஆய்வகத்தை முறையாக பராமரிக்க அறிவுறுத்தல் வேண்டும். உயர் தொழில்நுட்ப ஆய்வக அறையானது பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்துக்கொள்ள வேண்டும். உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தை கையாளும் போதும், அது நிறைவடையும்போதும், ஆசிரியர்கள் ஒரு Login Register ல் பதிவு செய்யும் வகையில் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். ஆய்வக அறையில் மின்சார இணைப்புகள் உறுதியாக உள்ளனவா என்பதை உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மின் கசிவு போன்ற நிகழ்வுகளால் ஆய்வகம் சேதமாகாமல் தடுத்திட அவ்வப்போது மின் இணைப்புகளை உரிய பணியாளரைக் கொண்டு சரிபார்த்து உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். தேவைப்படும் இடங்களில் கிரில் கேட் அமைத்திட தலைமையாசிரியர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களின் முக்கியத்துவத்தினை உணர்ந்து உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் அமைத்திட வேண்டும். ஒரு வார காலத்திற்குள் அனைத்து பாதுகாப்பு ஏற்பாட்டினை அமைத்து அதன் விவரத்தினை உடன் இவ்வலுவலக ஆ3 பிரிவிற்கு அனுப்புமாறு சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்
சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.